




# ஹர ஹர சங்கரா



FREE COPY
May - 2025
Vol. 4 - ISSUE 07

# KODAMBAKKAM TIMES


Say YES ! to Game!!
NO to CELL Addiction!!
THAYAM
Stimulates intelligence !
FOR IT PROFESSIONALS
RELIEVES STRESS!
FOR SENIOR CITIZENS
TIME PASS > STRESS FREE!
PASS ON TO NEXT GEN
KIDS FRIENDLY
AND FOR ALL AGE GROUPS!
WAY OUT FOR
CELL PHONE ADDICTION
தாயம்
READY TO PLAY
FOLDABLE WOODEN BOARD
TRADITIONAL INDOOR GAME
Further Details & Enquires Contact:
+91 86672 26122
thayamgames@gmail.com
www.thayamgames.com
12/19, Plot No 14, Nethajinagar, 3rd Street, Jafferkhanpet, Ashok Nagar.
Stimulates intelligence !




**1) ராம் ராம் பூர்வாங்க ஹோமம் தொடங்குவதற்கு முன்பு காலை பூஜ்யஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் மற்றும் பூஜ்யஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் பிருந்தாவன தரிசனம். பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் பாதங்களைப் பின்பற்றி புதிதாக 71 வது பீடாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கணேஷ சர்மா அவர்கள் தனது தாய், தந்தை, தங்கை ஆகியோர்களோடு பிருந்தாவன தரிசனம்.**

**2) காஞ்சி ஸ்ரீமடத்தின் 71 வது பீடாதிபதி கணபதியோடு ஸ்ரீகணேஷ சர்மா டிராவிட்டின் சிறு வயதில் எடுத்த புகைப்படம்.**

# காஞ்சி சங்கர மடத்தின் இளைய மடாதிபதியாக கணேச சர்மா பொறுப்பேற்பு

2533 ஆண்டுகள் பழமையான ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 71வது இளைய மடாதிபதியாக ஸ்ரீசத்ய வெங்கட் சூர்ய சுப்ரமண்ய கணேச சர்மா அட்சய திருதியை நாளில் (ஏப்.30) நியமிக்கப்பட்டுள்ளார். காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோவிலில் உள்ள பஞ்ச கங்கை தீர்த்தத்தில் இளைய மாடாதிபதியாக கணேச சர்மாவுக்கு ஸ்ரீ சங்சர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் சன்யாச ஆசிரம தீட்சை வழங்கினார். சன்யாச தீட்சை வழங்கப்பட்ட பின்னர் இவருக்கு ஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி என நாமம் சூட்டினார் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள். விழாவில் தமிழக கவர்னர் ரவி, ஆதீனங்கள், மடாதிபதிகள், சன்னியாசிகள் மற்றும் ஏராளமான பக்தர்கள் பலர் பங்கேற்றனர்.

சங்கு தீர்த்தத்தால் அபிஷேகம்

காமாட்சியம்மன் கோவிலில் உள்ள பஞ்ச கங்க தீர்த்த தெப்ப குளத்தில், நடந்த விழாவில் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கணேச சர்மாவுக்கு சன்யாச தீட்சை வழங்கி காவி வஸ்திரம், கமண்டலம், தண்டத்தையும் வழங்கினார்.

தொடர்ந்து இளைய மடாதிபதி தலையில் சாளக்கிராமம் வைத்து, சங்கு



தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து பல்வேறு மந்திர உபதேசங்கள் செய்தார். பின் இருவரும் இணைந்து பக்தர்களுக்கு அருளாசி வழங்கினர்.

காஞ்சிபுரம் சங்கர மடத்தின் மேலாளர் ந. சுந்தரேச அய்யர் விழா ஏற்பாடுகளை செய்திருந்தார்.



# F = MA என்ற விதியை தெளிவாக போதிக்கும் திருமூலர்





நியூட்டனின் **F = MA** என்ற விதியை தெளிவாக போதிக்கும் திருமூலர்

தமிழில் சொன்னதால் இது ஆன்மீகம் ஆயிற்று. ஆங்கிலத்தில் சொன்னதால் அது விஞ்ஞானம் ஆயிற்று.

திரு ஐன்ஸ்டீன் தனது **E = MC Square** என்ற சூத்திரத்தின் ஆதி நியூட்டனின் **F = MA** என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆனால் திருமூலர் இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக செயல்பட்டுள்ளார் என்பதை கீழ்காணும் செய்யுள் நிரூபிக்கும்.

**"அகார முதலா அனைத்துமாய் நிற்கும் உகார முதலா யுயிர்ப்பெய்து நிற்கும் அகர வுகார மிரண்டு மறியல் அகார உகார மிலிங்கம் தாமே"**

(திருமந்திரம் : 1753)

**பொருள் :**

அகரமாகிய சிவம் எல்லாவற்றுக்கும் முதலாய் எல்லாவற்றுடன் கலந்தும் விளங்கும். உகாரமாகிய சத்தி யாவற்றுக்கும் முதலாய் அவை உயிர் பெற்று நிற்க உதவும். இங்ஙனம் அகரம் சிவம் என்றும், உகரம் சக்தி என்றும் அறிந்தால், அகர உகரங்களை சிவலிங்கம் என்பது தெரிய வரும்.

**அறிவியல் :**

நியூட்டனின் F(Force) = M (Mass) * A (Acceleration) போதிப்பது யாதெனில் திடப்பொருளுடன் சக்தி சேரும் போது அங்குதான் இயக்கம் ஏற்படுகிறது என்பதாம். அதாவது ஒரு கல் ஒரு இடத்தில் அசையாதிருந்தால் அது வெறும் திடப்பொருள்தான் அந்த கல்லை ஒருவன் உருட்டி செல்கிறான் எனில் அங்கு உந்து சத்தி (**Acceleration**) ஏற்பட்டு கல்லானது இயக்கத்திற்கு உள்ளாகிறது.

இங்கே கல்லானது இயங்கும் திடப்பொருளாக உருமாறுகிறது. இதைத்தான் திருமூலர் **M(Mass)** ஐ சிவமாகவும், A(Acceleration) சக்தியாகவும் குறிப்பிட்டதோடு மட்டுமல்லாமல் சக்திதான் உயிர் கொடுக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எந்த ஒரு பொருளின் இயக்கத்திற்கு தேவை சக்தி மட்டுமே. சிவசக்தியின் கூட்டு சேர்க்கையே உயிரோட்டத்தின் அச்சாணி.

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

**COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar**

**K K NAGAR & VADAPALANI EDITION**

**COVERING AREA :**

**Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam**

**044 2484 4114 / 93826 82128 / 89390 70034**

E-mail : kodambakkamtimes@yahoo.com

# மகாபெரியவா சொன்ன ஆசீர்வாத மந்திரத்தின் அர்த்தம்

ஒரு நாள் காஞ்சி மகாபெரியவாளை தரிசனம் செய்ய "ஸிரோமணி" பட்டம் பெற்ற நாலைந்து பண்டிதர்கள் வந்திருந்தனர். மகாபெரியவா சாஸ்த்ர விஷயங்களை அவர்களுடன் ஸம்பாஷித்துக் கொண்டிருந்தபோது பேச்சுவாக்கில் இங்கு வரவா எல்லாம் நமஸ்காரம் பண்ணினா நான் திருப்பி "நாராயண, நாராயண"ன்னு சொல்லி ஆசீர்வாதம் பண்றேன். நானோ சன்யாஸி ஆனா சம்ஸாரிகள் நீங்க என்ன சொல்லி ஆசீர்வாதம் பண்ணுவேள்?" என்றார்.

"தீர்காயுஷ்மான் பவ? ஸௌம்ய"ன்னு சொல்லுவோம் பெரியவா" என்றனர் அவர்கள்.



"சரி .. அதுக்கு என்ன அர்த்தம்?" என்றார் மகாபெரியவர்.

"ரொம்ப நாள், தீர்க்கமான ஆயுஸோட, சௌக்கியமா இருன்னு அர்த்தம்", என்றனர் அவர்கள்.

அதையே அங்கிருந்த அனைத்து வித்வான்களிடமும் வரிசையாகக் கேட்டார் பெரியவர். அவர்கள் அனைவரும், "அதே அர்த்தம்தான் ..." என்று ஆமோதித்தனர்.

மகாபெரியவா கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டு, ஒரு அழகான புன்னகையோடு "நீங்க அத்தனை பேரும் சொன்ன அர்த்தம் தப்பு" என்றார். பண்டிதர்களுக்கு தூக்கி வாரி போட்டது.

"அது எப்படி? கொஞ்சம் சமஸ்கிருதம் தெரிந்தவர்கள் கூட இதற்கு அர்த்தம் சொல்லிவிடுவார்கள். அவ்வளவு சுலபமான வார்த்தைகள் அவை அது எப்படி தப்பாகும் ஒன்றும் புரியவில்லையே" என்றனர் அவர்கள்.

"நானே சொல்லட்டா?" என்றார் மகாபெரியவா.

எல்லோரும் காதை தீட்டிக் கொண்டார்கள்.

"இருபத்தேழு யோகங்கள்ல ஒரு யோகத்தோட பேர் "ஆயுஷ்மான்", பதினோரு

கரணங்கள்ல ஒரு கரணத்தின் பெயர், "பவ"ங்கறது, வார நாட்கள்ல "ஸௌம்யவாரம்"ன்னு சொல்லப்படறது புதன்கிழமை. இந்த மூணும், அதாவது "புதன்"கிழமையில "ஆயுஷ்மான்" யோகமும், "பவ" காரணமும் சேர்ந்து வந்தால், அந்த நாள் ரொம்ப ரொம்ப சிலாக்கியமாகச் சொல்லப்பட்டிருக்கு. அதனால், "ஆயுஷ்மான், பவ, ஸௌம்யன்னு இந்த மூணும் கூடி வந்தால், என்னென்ன நல்ல பலன்கள் கிடைக்குமோ, அதெல்லாம் உனக்கு தீர்க்கமா கிடைக்கட்டும்னு ஆசீர்வாதம் பண்றேன்னு அர்த்தம்" என்று முடித்தார் மகாபெரியவர்.

அத்தனை வித்வான்களும் ஒரே நேரத்தில், தண்டம் போல் பெரியவா பாதத்தில் விழுந்தனர். நாலைந்து சிரோன்மணிகள், அஞ்சாறு வித்யா வாசஸ்பதிகள் இருந்தும், கிளிப்பிள்ளை மாதிரி சொல்லிக்கொண்டிருந்த இத்தனை எளிய வாழ்த்துக்கு இவ்வளவு ஆழ்ந்த அர்த்தத்தைக் காட்டிக்கொடுத்த அந்த "ஞான மேரு"வின் முன் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுவதை விட வேறென்ன செய்ய முடியும்.

புதன்கிழமையோடு இந்த யோகமும், காரணமும் சேர்ந்து அமையும் நல்ல நாள் அரிது என்பதால்தானோ என்னவோ, "பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காதுனு சொல்லிச் சென்றுள்ளனர் நமது முன்னோர்கள்.

---

# அரிதான கனகவர்ஷினி படம்



சிருங்கேரி நூலகத்தில் உள்ள மிக அரிதான படம். இந்த படம் 1967 ஆம் ஆண்டு கருடன் மீது மஹாலட்சுமி, மஹாவிஷ்ணு இருவரும் கனகவர்ஷினியாக காட்சி தருகின்றார்கள்.

விஷ்ணுவின் புராணத்தில் உள்ள ஸ்லோகத்தின் அடிப்படையில் வரையப்பட்டது.

இந்த படத்தில் மகாவிஷ்ணு மற்றும் மகாலட்சுமி இருவரும் சேர்ந்து கையிலிருந்து தங்கத்தை வெளியிடுகிறார்கள். விஷ்ணு வலது கையில் சூரியனையும், இடது கையில் சந்திரனையும் பிடித்திருக்கிறார். கனகவர்ஷினி (கனக + வர்ஷினி) என்றால் "தங்க மழை பொழிவோன்" என பொருள். இது விஷ்ணுவின் ஒரு விசேஷ திருவுருவம்.

# சிவ வடிவங்கள்

மும்மூர்த்திகளுள் ஒருவர் சிவபெருமான். லிங்க வடிவில் வழிபடப்படும் அவர் லிங்கமல்லாத வடிவிலும் வழிபடப்படுகிறார். அருவம், உருவம், அருவுருவம் என மூன்று நிலைகளில் சிவபெருமான் வழிபடப்படுகிறார். அருவ நிலை சிவபெருமானுக்குரியதாக 25 வடிவங்களை சைவ சித்தாந்தம் சொல்கிறது. சிவபராக்கிரமம் என்னும் நூல் சிவபெருமானுக்கு 64 வடிவங்கள் உள்ளதாகக் குறிப்பிடுகிறது.

சிவனின் 25 வடிவங்களும் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள நந்தி மண்டபத்தில் உள்ளன.

சிவபெருமானின் 25 வடிவங்கள் அமைந்துள்ள கோயில்கள்

சோமாஸ்கந்தர் : திருவாரூர்
நடராஜர் : சிதம்பரம்
ரிஷபாரூடர் : வேதாரண்யம்
கல்யாணசுந்தரர் : திருமணஞ்சேரி
சந்திரசேகரர் : திருப்புகலூர்
பிட்சாடனர் : வழுவூர்
காமசம்ஹாரர் : குறுக்கை
காலசம்ஹாரர் : திருக்கடயூர்
திரிபுராந்தகர் : திருவதிகை
கஜசம்ஹாரர் : வழுவூர்
வீரபத்திரர் : கீழ்ப்பரசலூர் என்ற திருப்பறியலூர்
தட்சிணாமூர்த்தி : ஆலங்குடி
கிராதகர் : கும்பகோணம்
கங்காளர் : திருச்செங்காட்டங்குடி
சக்ரதானர் : திருவீழிமிழலை
கஜமுக அனுக்கிரக மூர்த்தி : திருவலஞ்சுழி
சண்டேச அனுக்கிரகர் : கங்கை கொண்ட சோழபுரம்
ஏகபாதமூர்த்தி : மதுரை
லிங்கோத்பவர் : திருவண்ணாமலை
சுகாசனர் : காஞ்சிபுரம்
உமாமகேஸ்வரர் : திருவையாறு
அரியர்த்த மூர்த்தி : சங்கரன்கோவில்
அர்த்தநாரீஸ்வரர் : திருச்செங்கோடு
நீலகண்டர் : சுருட்டப்பள்ளி
சலந்தராகரர் : திருவிற்குடி

இந்த 25 மூர்த்திகளும் சிவபெருமானின் 5 முகங்களாக விளங்கும் ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகியவற்றில் இருந்து பிறந்தவை என்று சிவ ஆகமங்கள் எடுத்துரைக்கின்றன.



ஈசானம் : சோமாஸ்கந்தர், நடராஜர், இரிடபாரூடர், சந்திரசேகரர், கல்யாணசுந்தரர்

தற்புருசம் : பிட்சாடனர், காமசம்ஹாரர், சலந்தராகரர், கால சம்ஹாரர், திரிபுராந்தகர்


அகோரம் : கசசங்ஹாரர், வீரபத்திரர், தட்சிணாமூர்த்தி, நீலகண்டர், கிராதர்

வாமதேவம் : கங்காளர், கசாரி, ஏகபாதர், சக்ரதானர், சண்டேசர்

சத்யோசாதம் : லிங்கோத்பவர், சுகானர், அர்த்தநாரீஸ்வரர், அரியர்த்த மூர்த்தி, உமாமகேஸ்வரர்

# செல்வத்தின் அதிபதி குபேரன்

உலகில் உள்ள ஒவ்வொரு உயிருக்கும் செல்வம், சக்தி, சுகம், சாந்தி என்பவை தேவையாக இருக்கின்றன. ஆனால் இந்த நால்வகையையும் ஒரே நேரத்தில் பெற்றவர்கள் சிலரே. அப்படி வாழ்வில் செல்வச் செழிப்பைப் பெற்று, உலகத்திற்கே நிதி அமைச்சராக அமர்ந்தவர் தான் செல்வத்தின் அதிபதி குபேரன்.



அவரைப் பற்றிய புராணங்கள், காவியங்கள், அந்தணர்கள் மற்றும் துறவிகளால் அனுதினமும் நமக்கு கூறப்பட்டு வருகின்றன. ஆனால், உண்மையில் அவர் எப்படி செல்வத்தின் அதிபதியாக ஆனார்? அவருடைய வாழ்க்கை நமக்கு என்ன பாடங்களை கொடுக்கிறது என்பதை இங்கு விரிவாக பார்ப்போம்.

**குபேரன் யார்? அவருடைய பின்புலம் என்ன?**

குபேரர் ஒரு மகா தபசி, நான்முகனாகிய பிரமாவின் மகனான புலஸ்திய முனிவருக்கு பிறந்தவர் விச்ரவசு. விச்ரவசுவின் மூத்த மனைவிக்கு பிறந்தவர்தான் குபேரன். அவர் ஆரம்பத்தில் வைஸ்ரவணன் என்ற பெயரில் அழைக்கப்பட்டார்.

அவருடைய தந்தைக்கு இரு மனைவிகள். இரண்டாவது மனைவிக்கு பிறந்தவர்கள் ராவணன், கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பனகை என்பவர்களாகும்.

அந்த காலத்தில் இலங்கை நாட்டை வைஸ்ரவணனே ஆண்டு வந்தார். ஆனால் ராவணன் தன் தவத்தின் மூலம் பல வரங்களை பெற்று, குபேரனைத் தோற்கடித்து, இலங்கையை கைப்பற்றுகிறான். நாடிழந்த வைஸ்ரவணன் அப்போது தபசியாக நாடுதோறும் அலைந்து கொண்டிருந்தார்.

**திருமணத்திற்கான தேடலும் சிவ வழிபாடும்**

அவருடைய திருமணத்திற்காக பெற்றோர்கள் முயற்சிக்க ஆரம்பித்தனர். ஆனால் எந்தப் பெண்ணையும் வைஸ்ரவணனுக்கு பிடிக்கவில்லை. சிவபெருமானின் திருவருளை பெறவேண்டும் என்பதே அவர் மனதின் ஒரே நோக்கம்.

அதற்காக சிவாலயம்தோறும் சென்று, சிவனை வணங்கி ஒரு அழகான மனைவியைக் கேட்டு வேண்டிக்கொண்டார். பிறகு நாடெங்கும் சுற்றி சிவத்தலம் தேடி தியானத்தில் முழுமையாக ஈடுபட்டார்.

**காசியில் முடியும் தவ வழி**

இறுதியில் காசி வந்து அங்கேயே அவர் தங்கினார். அகில உலகத்துக்கும் நாயகனான விஸ்வநாதரை தியானிக்கத் தொடங்கினார். பல வருடங்களாக தவமிருந்து இறைவனை தரிசிக்கக்கூடிய அந்த அற்புதத்தைத் தேடினார்.

மூச்சுவிடும் உணர்வின்றி ஆண்டாண்டு தவம் செய்தார். சில புராணங்கள் கூறுவதற்கேற்ப, இவர் எண்ணூறு ஆண்டுகள் தவம் செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த தவம் எந்த நோக்க மற்று எதிர்பார்ப்பின்றி தியானமனதுள்ள தவமாகும்.

**தவத்தின் சூடு கயிலாயத்தை எட்டியது**

அவருடைய தவத்தின் வலிமை கயிலாயத்தைச் சென்றடைந்தது. ஈசனும், பார்வதியும் தமது பக்தனுக்கு அருள் புரியக் கிளம்பினர். குபேரனுக்கு நேரில் தோன்றிய சிவபெருமானும், பார்வதியும் அவரை பாராட்டி அழகாபுரி எனும் நகரத்தைத் தந்தனர்.

அவரை செல்வத்தின் அதிபதியாக நியமித்தனர். அஷ்டதிக் பாலகர்களில் வடக்கு திசையை அவருக்கு ஒப்படைத்தனர்.

**குபேரனின் அருமை, தவத்தின் பயன்**

இறைவன் அவருக்குத் திருமணம் செய்துவைத்து, சித்திரரேகை என்ற மங்கையைத் துணையாக வழங்கினார். மேலும், அவரை சிவசகா எனும் விருதுப் பெயரால் அழைத்தார்.

**அவருடைய பிள்ளைகள் :** நளகூபன் மற்றும் மணிக்ரீவன்.

நவ நிதிகள் என்றழைக்கப்படும் : பத்ம நிதி, மஹா பத்ம நிதி, கச்சப நிதி, மகர நிதி, குமுத நிதி, நந்த நிதி, சங்க நிதி, நீலம நிதி, பத்மினி நிதி ஆகிய அனைத்தையும் குபேரன் பாதுகாக்கிறார்.

இதில் சில தெய்வ மகளிரான பத்மா மற்றும் சங்க நிதியுடன் அவர் திருக்கல்யாணம் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



**கிராம்பு பாவாடை மற்றும் வேப்பம்பூ மாலை அலங்காரத்தில் சமயபுரம் மாரியம்மன் உற்றசவர்.**

**குபேரனின் வடிவம், பூஜை நேரம், வாகனம் :** சிவந்த மேனி, குள்ள உருவம், பெரிய வயிறு, வெண் குதிரை அவரது வாகனம், கைப்பிடியில் தாமரை மலர் மற்றொரு கையில் வரதமுத்திரை, மடி மீது கீரிப்பிள்ளை.

வியாழக்கிழமை மாலை 5.30 முதல் 6.00 மணி வரை குபேர காலமாகக் கருதப்படுகிறது. இந்த நேரத்தில் இவரை வணங்கினால் செல்வச் செழிப்பு உண்டாகும் என்பது நம்பிக்கை.

**திருப்பதி வெங்கடாசலபதிக்கும் கடன் கொடுத்த குபேரன் :**

தியாக உணர்வும், நேர்மையும் கொண்ட குபேரன் திருப்பதி வெங்கடாசலபதிக்கு திருமண நிகழ்வின் செலவிற்காக கடன் வழங்கியவராக சொல்லப்படுகிறது.

இன்றும் திருப்பதி கோவிலில் செலவுகள் குபேரனிடம் இருந்து கடன் பெற்றதாகவே கருதப்படுகிறது.

**குபேர வழிபாட்டில் பெறும் நன்மைகள் :** வீட்டில் பணவரவு அதிகரிக்கும், பணக்கஷ்டங்கள் தீரும், பாக்கிய நிதியுடன் கூடிய வாழ்வு கிடைக்கும், நியாயமான வாழ்க்கை நடத்தும் நபர்களுக்கு உயர்வு, தொழிலில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**நிச்சயம் நேர்மையானவர்களுக்கு நேரம் வரும்**

குபேரனின் வாழ்க்கை நமக்கு ஒரு முக்கியமான பாடம் அளிக்கிறது. எதிர்பார்ப்பின்றி, தன்னலம் கருதாமல் தவம் செய்வோருக்கு இறைவன் தரிசனம் தருவார். செல்வம் மட்டும் அல்ல, உலகத்திற்கு நிதி அமைச்சராகும் பெரும் பொறுப்பையும் அளிப்பார்.

---

# பிரதோஷத்தின் பலன்கள்



பிரதோஷத்தின் பலன்கள் கிழமை அடிப்படையில்

**ஞாயிற்றுக்கிழமை :** பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். தம்பதி ஒற்றுமை மேலோங்கும்.

**திங்கள்கிழமை :** மன நிம்மதியும் மகிழ்ச்சியும் கிட்டும். மன வலிமை பெருகும்.

**செவ்வாய்க்கிழமை :** பித்ரு தோஷம் விலகும். முன்னோர் ஆசி கிடைக்கும்.

**புதன்கிழமை :** கல்வி சிறக்கும். கலைகளில் சிறந்து விளங்குவார்கள்.

**வியாழக்கிழமை :** கிரக தோஷத்தால் ஏற்படும் தீமை குறையும். குருபலம் கூடும்.

**வெள்ளிக்கிழமை :** உறவு வளப்படும். சகல ஐஸ்வர்யங்களும் கிட்டும். சுக்கிரயோகம் கிடைக்கும்.

**சனிக்கிழமை :** கிரக தோஷத்தால் ஏற்படும் தீமை குறையும். பஞ்சமாபாவமும் நீங்கும்.

# வேதாந்த தேசிகர்

தன் அடியவர்களை காத்திட பகவான் பல நிலைகளை மேற் கொள்கிறார். அவர்களின் அஞ்ஞானத்தை அழித்து, ஞானத்தை வளர்ப்பதும் அந்த நிலைகளில் ஒன்றாகும். அப்படிப்பட்ட ஆசார்ய நிலையில் அவதரித்து அஞ்ஞானத்தை அகற்றி ஞானம் எனும் விளக்கை ஏற்றியவர் திருவேங்கடமுடையான் என்ற திருநாமத்தை கொண்ட வேதாந்த தேசிகர். இவர் கி.பி.1268-ம் ஆண்டு காஞ்சிபுரத்தில் உள்ள தூப்புல் எனும் இடத்தில் திருமலை வேங்கடவன் கோவில் மணியின் அம்சமாக பிறந்தவர். திருப்பதி ஏழுமலையானின் "ஆராதனை மணி"யாக அருள் பாலிக்கும் வேதாந்த தேசிகரின் கதை, அவர் இயற்றிய நூல்களின் சிறப்புகளையும் நாம் அறிந்து கொள்வோம்.

காஞ்சிபுரத்தையடுத்த ஸ்ரீதூப்புல் எனும் கிராமத்தில் அனந்தாசார்யார் தோதாரம்பை எனும் வைணவ தம்பதியர் வேத விதி தவறாமல் இல்லறம் நடத்தி வந்தனர். இத் தம்பதிகளுக்கு புத்திர பாக்கியம் கிடைக்கவில்லை. அச்சமயம், திருமலையில் அருள் பாலிக்கும் திருவேங்கடமுடையான் அவர்கள் கனவில் தோன்றி தன்னிடம் வரும் படி அழைக்க, அவர்களும் திருமலை அடைந்து இறைவனை வழிபட்டனர். அன்றிரவு தோதாரம்பா கனவில் பெருமாள் தோன்றி", உங்களுக்கு எம்மைப் போல் ஒரு புத்திரனைத் தந்தோம். இத் திருமணியை (நைவேத்தியத்தின் போது அடிக்கும் ஆராதனை மணி) பெற்றுக் கொள்ளும் என கொடுக்க. ஸ்வாமியின் ஆணைப்படி தோதாரம்பை தான் அம் மணியை விழுங்கியதை எண்ணி திடுக்கிட்டு கனவில் இருந்து எழுந்தவர் சிறிது தாக சாந்தி செய்து விட்டு உறங்கிப் போனார்.

மறுநாள் திருவேங்கடமுடையான் சன்னதியில் திருமணியைக் காணாமல் அனைவரும் திகைத்து நின்ற போது, அக் கனவை கண்ட பெரிய ஜீயர், பெருமாளின் கட்டளையை அனைவருக்கும் தெரிவித்தார். அவ் வேளையில் இறைவனை சேவிக்க அங்கு வந்த அனந்தாச்சார்யார் தம்பதியை அனைவரும் கொண்டாடினர். அவருக்கு மணியின் அம்சமாக அதி தேஜஸ்வியான குமரன் பிறந்தான். அக் குழந்தைக்கு "திருவேங்கடமுடையான்" என்று சூட்ட அவரே பின்னாளில் "வேதாந்த தேசிகர்" என்ற புகழுடன் இராமனுஜர் சம்பிரதாயத்தின் தூணாக விளங்கினார். இருபது வயதிற்குள் அனைத்து கலைகளிலும் தேர்ச்சி பெற்று, தக்க பருவத்தில் திருமங்கை எனும் பெண்ணை விவாகம் செய்து கொண்டார்.

இராமானுஜர் பரம பதத்தை அடைந்த பின்னர் வைணவத்தின் தலைமை பீடம் வெற்றிடமாகாமல் வேதாந்த தேசிகர் தோன்றி அவ்விடத்தை மேலும் பிரகாசப்படுத்தியதால் அவர் நிகமாந்த தேசிகர் என்று அழைக்கப்பட்டார். ஆழ்வார்கள் அருளிச் செய்தவை "நாலாயிர திவ்யப் பிரபந்தம்" என்றால், தேசிகர் அருளிச் செய்தவை "தேசிகப் பிரபந்தம்" என அழைக்கப்படுவதோடு பெரும்பாலான வடகலை வைணவர்களால் ஓதப்பட்டு வருகிறது. வட கலையை பின்பற்றும் கோவில்களில் இவருக்கென தனி சன்னதியோடு முதல் வழிபாடும்




நடத்தப்படுகிறது. இன்றும் திருமலையில் வெள்ளிக்கிழமை திருமஞ்சனத்திற்கு முன் தேசிகரின் அடைக்கலப்பத்து பாடப் பெற்று வருகிறது.

இவர் காலத்தில் தான் வைணவம் வடகலை, தென்கலை என இரண்டாகப் பிரிந்தது. மாலிக்காபூர் படையெடுப்பின் போது திருவரங்கக் கோயானைக் (ஸ்ரீரங்கம்) காத்தவர்களுள் இவரும் ஒருவர்.

நூல்களின் சிறப்புகள் : வேதாந்த தேசிகர் 1. தமிழ் மொழி, 2. மணிப்பிரவாளம் (தமிழ், சமஸ்கிருதம் கலந்தது), 3. வடமொழி, 4. பிராகிருதம் ஆகிய மொழிகளில் 124 நூல்களை எழுதக் கூடிய பாண்டியத்தைப் பெற்றார். இவரின் ஆளுமையைக் கேட்டு ரெங்க மன்னர் "வேந்தாந்தாச்சார்யார்" என ஆசிர்வதித்தார். வேதங்களை சிலர் தாம் கற்கலாம் என்றிருந்த அவர் காலத்தில் எல்லா வருணத்தைச் சேர்ந்தவர்களும், பெண்களும் வேதத்தைக் கற்கலாம் எனச் சொல்லி, "வில்லரை ரகசியங்கள்" எனும் தலைப்பில் 32 நூல்களை இயற்றினார். தேசிகர் தமிழ் இலக்கியத்தில் இது வரை யாராலும் எழுதப்படாத "திருச்சின்ன மாலை" என்ற பிரபந்தத்தை அருளிச் செய்தார்.

திருவஹீந்திபுரம் கோயிலில் வந்து தங்கி கருடாழ்வாரின் தரிசனம் கிடைக்கப் பெற்றார். மந்திர உபதேசம் பெற்றதன் பயனாய் ஸ்ரீஹயக்ரீவர் காட்சி தந்து வாக்கு வன்மையை அருளினார்.


1. வறுமைப் பட்ட ஏழை அந்தண பிரம்மச்சாரியிடம் கருணை கொண்டு, காஞ்சிபுரம் தேவப் பெருமாள் கோயில் தாயார் சன்னதி முன்பாக "ஸ்ரீ ஸ்துதி" என்ற நூலை அருளிச் செய்தவுடன் பொன் மழை பொழிவதைக் கண்டு பக்தர்கள் அதிசயித்தனர்.

2. தீயவர்கள் சிலரால் தூண்டப்பட்ட பாம்பாட்டி ஒருவன் இவர் முன்னே பாம்பை விட, தேசிகர் அமைதியாக கருட மந்திரத்தை தியானம் செய்தவுடன் அங்கு வந்த கருடன் அப் பாம்பை தூக்கிச் செல்ல, பாம்பாட்டி மன்னிப்பு கேட்க பின்னர் தேசிகர் "கருட தண்டகத்தை" கூறி கருடனை புகழ்ந்து பாடியவுடன் கருடன் பாம்பை கொண்டு வந்து தந்தாராம். இவ்வாறு பல அற்புதங்களை தம் நூல்களின் மூலம் நிகழ்த்தி காட்டினார் தேசிகர்.


3. தேசிகர் அருளிய படைப்புகளில் அதி அற்புதமானது, "பாதுகா சஹஸ்ரம்" எனும் வடமொழி நூல். பெருமாளுடைய பாதுகையைப் பற்றி இதுவரை எந்த அருளாளரும் எம் மொழியிலும் பாடவில்லை. நம்மாழ்வாரும், பாதுகையும் ஒன்று என்றொரு ஸ்லோகம் அதிலுள்ளது. பாதுகையின் பெருமையை அறிந்ததால் பரதன் "பரதாழ்வான்" எனப் பாராட்டப்படுவதாக தேசிகன் எண்ணுகிறார். வானத்தை ஏடாகக் கொண்டு, ஏழு சமுத்திரங்களையும் மையாகக் கொண்டு பெருமாளே எழுதினால் தான் பாதுகையின் பெருமையைச் சொல்ல முடியும் என்கிறார் சுவாமி தேசிகர். எம் பெருமானை வைணவத்தின் வேர் என்றால், வேதாந்த தேசிகனை விழுது எனச் சொல்லலாம். தனது 101-வது வயதில், ஸௌம்ய வருஷம் கார்த்திகை மாதம் பௌர்ணமி தினத்தன்று பரமபத நாதன் திருவடியை அடைந்தார். சீரர் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

....... ஹேமலதா க்ருஷ்ணகுமார்

# ஸ்ரீரங்க விமானம்







"காவேரி விருஜா ஸேயம், வைகுண்டம் ரங்கமந்திரம்
ஸ வாஸுதேவோ ரெங்கேசஹா, ப்ரயத்யக்ஷம் பரமம்பதம்
விமானம் ப்ரணவாஹாரம், வேதஷ்ருங்கம் மஹாத்புதம்
ஸ்ரீரங்கசாயி பகவான் ப்ரணவார்த்த ப்ராகாசந:

ஸ்ரீரங்கம் திருக்கோயில் ஏழு திருச்சுற்றுக்களை உடையது. கோயிலின் நடுவே அரங்கன் ஸயனத் திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ள பிரணவாஹார (ஓம்கார வடிவம்) ரங்க விமானம். இந்த ரங்க விமானமானது நீள் வட்டவடிவில் அமைந்துள்ளது. வேதிகை, கிரீவம், சிகரம், ஸ்தூபி (கலசம்) என்ற அங்கங்களுடன் அமையப்பெற்றது. கிரீவத்தின் நான்கு திசைகளிலும், தேவகோட்டங்கள் அமைந்துள்ளன. தெற்கு தேவகோட்டம் மட்டும் முன்வந்து நீட்சி பெற்று, மகர தோரண வடிவுடன் விளங்கும் இதில் பரவாஸுதேவர் எழுந்தருளியிருக்கிறார்.

ரங்க விமானத்தின் மேற்கே அச்சுதன், வடக்கே அனந்தன், கிழக்கே கோவிந்தன் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். விமானத்தின் மேற்கு பகுதி மகாபத்மம் (விரிந்த தாமரை மலர் போன்று) மேலே, கிழக்கு மேற்காக நான்கு கலசங்களும் (நான்கு வேதங்கள்), தெற்கு வடக்காக ஐந்து கலசங்களும் (காயத்ரியின் சிரசு) அமைந்துள்ளது. தெய்வாம்சம் வாய்ந்த இந்த ஸ்ரீரங்க விமானத்தில் "234 தேவதைகள்" எழுந்தருளியுள்ளதாக "பாரமேஸ்வர சம்ஹிதை" கூறுகிறது.

# KRISHNA DELISH COFFEE




## எங்களிடம் தரமான காபி
## கொட்டை அரைத்து தரப்படும்

## 1 கிலோ காபி பவுடர்
## ரூ 920 மட்டுமே

---

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS. 20 only

COFFEE POWDER
DOOR DELIVERY FREE
ALSO AVAILABLE

* Condition Apply

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore Ganapathy's
CELEBRATING 83 Years
ANNIVERSARY
Since 1942

மயிலாப்பூர்
# கணபதிஸ் ®
ஸ்தாபிதம் 1942

## வெண்ணெய் & நெய்

### பாரம்பரியமாக 1942 முதல்

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

**மயிலாப்பூர் கிளை :**
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு.
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com

ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com